ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2122/55 - 2019 මැයි මස 10 වැනි සිකුරාදා - 2019.05.10

*2122/55 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVPANN/LND/ACDEP/1/4/15.
கா.ம.பா.ம.அ.குறிப்பு இல.: 4-3/2017/LO/283.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பன்னல பிரதேச செயலாளர் பிரிவில், மெதபத்து மேற்கு கோறளே ஹொரதெபொல மற்றும் வடுமுன்னேகெதர கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.01.30 ஆந் திகதிய இ.கி.வ. இல. 292 இன் பிற்சேர்க்கை இல. 10, தாள் இல. 12 மற்றும் இ.கி.வ. இல. 293 இன் பிற்சேர்க்கை இல. 8, தாள் இல. 8 ஆகிய வரைபடங்கள் மூலம் விபரமாகக் காட்டப்பட்ட 0.8093 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் :

*01.* **துண்டு இல. 99**

காணியின் பெயர் : ஹொரதெபொலவத்தை; விபரம் : வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடமொன்று, 02 நிரந்தரக் கட்டிடத்தின் பகுதிகள், சீமெந்தினால் கட்டப்பட்ட கிணறொன்று, 40 - 45 வருட வயதிலான 50 தென்னை மரங்கள், 20 - 25 வருட வயதிலான 25 தென்னை மரங்கள், 5 மரமுந்திரி மரங்கள், பலா மரமொன்று, 15 - 20 வருட வயதிலான 32 தேக்கு மரங்களுடனான பயிர்ச் செய்கை காணப்பட்டுள்ளன; உரிமை கோருவோர்: கடுவெல, கொரதொட்ட வடக்கு, இல. 716/5 இல் வசிக்கும் ஏ.ஏ.ஐ. ஜயவர்தன; விஸ்தீரணம்: 0.6498 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. 100**

காணியின் பெயர் : ஹொரதெபொலவத்தை; விபரம் : வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி மற்றும் 40 - 45 வருட வயதிலான 02 தென்னை மரங்கள் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: கண்டுபிடிக்க முடியாது; விஸ்தீரணம்: 0.0173 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல. 78**

*காணியின் பெயர் : நில்லியமுல்லவத்தை, கொன்கஹவத்தை; விபரம் : வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி, 40 - 45 வருட வயதிலான 10 தென்னை மரங்கள், 20 - 25 வருட வயதிலான 5 தென்னை மரங்கள் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: கடுவெல, கொரதொட்ட வடக்கு, இல. 716/5 இல் வசிக்கும் ஏ. ஏ. ஐ. ஜயவர்தன; விஸ்தீரணம்: 0.1422 ஹெக்டயார்.*

*மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஆனி மாதம் 19 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பன்னல கிழக்கு பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஆனி மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

*ஆர். எம். எஸ். விக்கிரமரத்ன பண்டார,*
*பிரதேச செயலாளர்,*
*பன்னல.*

*பிரதேச செயலகம்,*
*பன்னல,*
*2019, வைகாசி 06.*

*5 - 683*